## தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(06-02-2015 – 10-02-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 05-02-2016

**கடந்த கால வானிலை 02-02-2016 முதல் 04-02-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32-33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 20 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 35-77 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 5-11 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 10-02-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 06.02.16 | 07.02.16 | 08.02.16 | 09.02.16 | 10.02.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 24 | 24 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 20 | 20 | 20 | 19 | 19 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 86 | 87 | 92 | 94 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 45 | 46 | 47 | 60 | 61 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 7 | 7 | 7 | 7 | 7 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

**குறுஞ்செய்தி**

வரும் ஐந்து நாட்களுக்கு வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி, கரும்பு மற்றும் காய்கறிகள்**

**பருவம்: நெல்- முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம், பருத்தி-காய்க்கும் பருவம்**

- வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை நிலையில் உள்ள நெல்லினை அறுவடை செய்து நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கலாம்.
- பருத்தியில் பூ உதிர்தலை தடுக்க 40 பி.பி.எம் என்.ஏ.ஏ. கலவையை (அதாவது லிட்டருக்கு 40 மி.கிராம் நாப்தலீன் அசிடிக் அசிட் என்ற அளவில்) விதைத்த 60 மற்றும் 90-வது நாட்களில் தெளிக்கலாம்.
- பருத்தியில் இலை பழுப்பு நோயைக் கட்டுப்படுத்த ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்+ டெட்ராசைக்ளின் கலவை 100g+ காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1250g/ha தண்ணிரில் கலந்து தெளிக்கவும். மேலும் இரண்டு அல்லது மூன்று முறை 10 நாள் இடைவெளியில் தெளிக்கலாம்.
- கரும்பு இரும்புச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெர்ரஸ் சல்பேட் 100 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம் அல்லது எக்கருக்கு 25 கிராம் பெர்ரஸ் சல்பேட் மண்வழி இடலாம்.